## அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மரக்கன்று நடும் முகாம்

கும்பகோணத்தை அடுத்துள்ள கோவிலாச்சேரியில் அமைந்துள்ள அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக மரக்கன்று நடும் முகாம் அம்மன்பேட்டை தூய வளனார் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமில் அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் **Dr.S.P.மாணிக்கவாசுகி** அவர்கள் தலைமையேற்று நிகழ்ச்சியை துவங்கி வைத்தார். துணை முதல்வர்கள் பேரா. எஸ்.இளஞ்செழியன்,பேரா.கே.ராஜா ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர். சிறப்பு விருந்தினராக பள்ளியின் தலைமையாசிரியை அருட்சகோதரி ஜே.பி.நெல்சன் ஜெனித் சிறப்புரை வழங்கினார். பள்ளியில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பேராசிரியர் எஸ்.சோமசுந்தரம் வரவேற்புரை வழங்கினார்.இந்நிகழ்ச்சியின் இறுதியில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர் பாலாஜி நன்றியுரை கூறினார். இந்நிகழ்ச்சி பேரா..எஸ்.சுரேந்திரன் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஏற்பாடு செய்திருந்தார்.






Not Me
But You
அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவிலாச்சேரி, கும்பகோணம்.
நாட்டு நலப்பணித் திட்டம்
அலகு I, II, III நடத்தும்
மரம் நடும் முகாம்
10.12.2018
அனைவரும் வருக! வருக!!
மரம் வளர்ப்போம்!